www.tamilarangam.net

தமிழீழ தேசிய
விடுதலை முன்னணி

# அரசியற் திட்டம்

NLFT

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களே,
மக்கள் மட்டுமே
வரலாற்றை உருவாக்கும்
உந்துசக்திகளாவர்!

# தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் அரசியற் திட்டம்

## National Liberation Front of Thamil Eelam

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ் அரசியற் திட்டம் எமது நோக்கத்தின் அடிப்படையிலான அரசியல் வழிமுறைகளுக்கேற்ப வகுக்கப்பட்டு, அமைப்பின் சகல மட்டங்களிலும் விவாதிக்கப்பட்டுப் பெறப்பட்டதாகும். இது தமிழீழ தேசிய விடுதலையை சரியான திசை வழியில் வென்றெடுப்பதற்கான திட்டமாகும். இதை ஆழமாக்கவும், செழுமைப்படுத்தவும் நடைமுறைப்படுத்தவும் வேண்டி உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

மத்திய குழு

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

புரட்டாதி - 1984

தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின்

# அரசியற் திட்டம்

## 1. வரலாறு

1. 1 இலங்கைத் தீவு பல்லினங்களைக் கொண்ட ஒரு நாடு. இதில் சிங்களவர், பூர்வீகத்தமிழர் ஆகிய தேசிய இனங்களும் (NATION) முஸ்லீம்கள், மலையக மக்கள் ஆகிய தேசிய சிறுபான்மை இன மக்களும் மிகச் சிறிய அளவில் பறங்கியர், மலாயர் ஆகியோரும் வாழ்கின்றனர்.

1. 2 சிங்கள மக்களும், பூர்வீகத் தமிழர்களும் இலங்கையின் வரலாறு அறிந்த காலம் தொடக்கம் வாழ்ந்து வருகின்றனர். முஸ்லிம் மக்களும் பல நூற்றுண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்.

1. 3 பிரிட்டிஷாரால் 19ம் நூற்றுண்டில் பெரும் தோட்டங்கள் உருவாக்கப்பட்டதன் விளைவாக தமிழ்நாட்டில் இருந்து (தென் இந்தியா) கொண்டு வரப்பட்டு குடியமர்த்தப்பட்ட மக்களே மலையக மக்கள் ஆவார்கள்.

1. 4 போர்த்துக்கேயர் இலங்கைத் தீவில் காலடி வைத்தபோது சிங்கள மக்கள் வாழ்ந்த பிரதேசத்தில் இரு அரசுகளும், வடக்கில் தமிழ் மக்களைக் கொண்ட அரசும், இன்னும் பல சிற்றரசுகளும் இருந்தன. (வடக்கில் இருந்த அரசு தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டிருந்தது.)

1. 5 1815இல் முழு இலங்கைத் தீவையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்த பிரிட்டிஷார் தமது பொருளாதாரச் சுரண்டலை வெற்றிகரமாக நடத்துவதற்காக தமிழ், சிங்கள மக்களிடையே விரோதத்தைத் திட்டமிட்டு வளர்த்து விட்டனர். பிரிட்டிஷார் தமது நலன் கருதி சேர்த்தாண்டது போல் பிரித்தாளும் தந்திரத்தையும் கையாண்டனர்.

1. 6 இன்று வடகிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் சிங்கள மக்களும், வடகிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களும்

www.tamilarangam.net

மலையகப் பகுதிகளில் (இலங்கையின் மத்திய பகுதி) மலையக மக்களும் செறிவாக வாழ்ந்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியில் செறிவாகவும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் சிதறுண்டும், முஸ்லீம் மக்கள் வாழ்கின்றனர்.

## 2. பிரச்சினையின் இன்றைய வடிவம்

2. 1 சிங்கள மக்களின் தேசிய எழுச்சியானது சிங்கள பெரு முதலாளிய நலன்களுக்காகவும், பொருளாதார அரசியல் மேலாதிக்க நோக்கங்களுக்காகவும், சிங்களப் பெருமின வெறியாக திசை திருப்பப்பட்டுள்ளது.

2. 2 சுதந்திரத்திற்குப் பின் ஆட்சிக்கு வந்த அரசுகள் ஸ்தாபனமயமாக்கப்பட்ட பௌத்த சிங்கள இனவாதத்தின் மீதே தமது இருப்பை நிலைநிறுத்திக் கொண்டன. (இதன் மூலம் முதலாளியப் போட்டியில் சிங்கள முதலாளிகள் தமது மேலாதிக்கத்தை நிறைவேற்ற உந்துசக்தியைப் பெற்றனர்.) இவை தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறையை தொடர்ந்து அதிகரித்தே வந்துள்ளன.

### 2. 3 தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறையின் வடிவங்கள்

2.3. 1 தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பறித்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடத்துவதன் மூலம் தமிழ் மக்களின் தனித்துவத்தை இல்லாதொழித்தல்

2.3. 2 தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து வழங்கப்படாமையும் சிங்கள மொழித் திணிப்பும்

2.3. 3 உயர்கல்வி, வேலை வாய்ப்பு, பதவி உயர்வுகளில் புறக்கணிப்பு

2.3. 4 மலையக மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டு தேசிய வாழ்வில் இருந்து அந்நியப்படுத்தியமை (இன்றும் பதிவுப்பிரஜை, வம்சாவழிப் பிரஜை என்ற வேறுபாடு உண்டு)

2.3. 5 மூலவளச் சுரண்டல் - திட்டமிட்ட மீனவர் குடியேற்றம் மூலம் மீன்வளம் அபகரிப்பு



2.3. 6 தமிழ் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தி புறக்கணிக்கப்படுவதுடன் சுயமான கைத்தொழில் அபிவிருத்திக்கு - தமிழ் முதலாளித்துவ வளர்ச்சிக்கு -தடையாக இருத்தல்;

2.3. 7 திட்டமிடப்பட்ட இனப்படுகொலைகளும், காடைத்தனங்களும் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்படல்.

2.3. 8 ஜனநாயக உரிமை மறுப்பு, பயங்கரவாதத் தடைச்சட்டம், போன்ற கொடிய சட்டங்கள் மூலம் இராணுவத்தினரின் படுகொலைகள், காட்டுமிராண்டித்தனங்கள், சித்திரவதைகளுக்கு நியாயம் கற்பித்து தமிழ் மக்களின் உயிர் வாழ்க்கைக்கே உத்தரவாதமற்ற நிலையை உருவாக்கி உள்ளமை.

2. 4 இன்றைய இலங்கைச் சமூகம் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மையமாகவும், நிலப்பிரபுத்துவ எச்சசொச்சங்களையும் கொண்ட நவகாலனித்துவத் தன்மை கொண்டது. இங்கு பாரிய கைத்தொழில்கள் வளர்ச்சியடையாத படியால் வணிக மூலதனமே மேலாதிக்கம் வகிக்கிறது.

2. 5 திறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் ஏகாதிபத்திய நாடுகளின் சந்தையாக மாறியுள்ள இன்றைய தரகு முதலாளித்துவ அரசு, நவகாலனித்துவ சுரண்டலுக்கு இசைவாக பாசிசத் தன்மையுடையதாக மாறியுள்ளது. பேரினவெறியை வளர்ப்பதன் மூலம் பாசிசத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துகின்றது.

2. 6 இன்றைய தரகு முதலாளித்துவ அரசிற்கும் முழு நாட்டு மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டைவிட, அரசிற்கும் தமிழ் மக்களிற்குமிடையிலான முரண்பாடு கூர்மையடைந்துள்ளது. முரண்பாடுகளின் சமச்சீரற்ற வளர்ச்சியினால் இதுவே முதன்மை முரண்பாடாக உள்ளது.

## 3. பிரச்சினைக்கான தீர்வு

3. 1 வடகிழக்கு பகுதிகளான தமது பாரம்பரிய பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் தேசிய இனத்துக்குரிய சகல அம்சங்களையும் - பொதுவான மொழி, பொதுப் பிரதேசம், கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட மனோ இயல்பு, பொதுப் பொருளாதார வாழ்வு, இவற்றை அடிப்படையாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு வரலாற்று ரீதியாக நிலைபெற்றுவிட்ட மக்கள் சமூகம்—கொண்டுள்ளனர். தேசிய இனம் என்ற வகையில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு.

3. 2 சிங்கள தொழிலாளி வர்க்கமும், பரந்துபட்ட மக்களும், இனவாதச் சகதியுள் மூழ்கியுள்ளதால் தமிழ் மக்கள் இவ்வமைப்பில் பூரண உரிமைகளுடன் வாழமுடியாதுள்ளது. எனவே தமிழ் தேசிய இனம் சுயநிர்ணய உரிமையான, தமக்கான இறைமையுள்ள அரசை உருவாக்குவதே இன்றைய நிலையில் சாத்தியமான தீர்வாகும்.

3. 3 மலையக மக்களின் தலைவிதியை அவர்களே தீர்மானிக்கும் உரிமையுடையவர்கள். பாதுகாப்பையும், வாழ்வையும் உத்தரவாதம் செய்ய அவர்கள் வாழும் பிரதேசத்தில் போராட முன்முயற்சி எடுத்தல்.

3. 4 முஸ்லீம் மக்களை தமது தனித்துவத்தைப் பேணக்கூடிய வகையில், தமிழ் மக்களின் போராட்டத்துடன் இணைந்து செல்லக் கூடியதாக அணிதிரட்டல்.

# 4. எமது போராட்ட வழிமுறை

4. 1 தமிழ் பேசும் மக்களுக்கும் அரசிற்கும் இடையிலான முரண்பாட்டை—எதிரி முரண்பாட்டை—ஆயுதம் ஏந்திய போராட்டம் மூலமே தீர்க்கப்பட முடியும்.

4. 2 எமது போராட்டம், தமிழ் பிரதேசத்தை சிங்கள அரசிடமிருந்து மீட்டெடுக்கின்ற தேசிய விடுதலைப் போராட்டம் என்ற வகையில் மக்கள் போராட்டமாகவே அமையும். மக்களை ஸ்தாபனமயப்படுத்தி ஆயுதமேந்திய போராட்டமாகிய மக்கள் யுத்தமே எமது யுத்த தந்திரமாகும்.

4. 3 தமிழ் மக்களிடையே பொருளாதார அரசியல் அம்சங்களில் சமச்சீரற்ற வளர்ச்சி உண்டு. இதன் காரணமாக போராட்ட சக்திகளது வளர்ச்சியும் சமச்சீரற்றதாகவே இருக்கும். எமது போராட்டம் மக்கள் சக்தியில் தங்கி நின்று அணிதிரட்டி, சிறுகச் சிறுக போராட்ட சக்திகளை கட்டியெழுப்பும் வகையிலான மக்கள் யுத்தமாக அமையும். இது தற்காப்புக் கட்டம், தாக்குதற் கட்டம், இறுதியாக முழு வெற்றிக்கான தேசம் பரந்த உள்நாட்டு யுத்தம் என்ற கட்டத்திற்கு வளர்ந்து செல்லும். மலையக மக்களினை அணிதிரட்டி அவர்களின் உரிமைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் ஆயுதமேந்திய போராட்டத்தை முன்னெடுக்க வழிநடத்தல். இப் போராட்டங்கள் ஒன்றுக்கொன்று உதவும் வகையில் அமையும் வண்ணம் முன்னெடுத்தல்.

4. 4 எமதுநேரடி எதிரி, சிங்கள இனவெறி அரசும் ஆயுதப்படையுமே. இவற்றை எமது மண்ணில் இருந்து விரட்டியடிப்பதன் மூலமே, எமக்கான இறைமை உள்ள அரசை உருவாக்கவும், ஒடுக்குமுறைக்குள்ளாகி வரும் சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தைத் தொடுக்கும் வகையில் சிங்கள புரட்சிகர சக்திகளுக்கு உதவியளிக்கவும் முடியும். சர்வதேச ரீதியாக புரட்சிகர சக்திகளினதும் முற்போக்கு சக்திகளதும் போராட்டத்திற்கும் முன்னேற்றத்திற்கும், இசைவாகவும், பரஸ்பரம் உதவும் வகையிலும் இவர்களது ஆதரவைப் பெறும் வகையிலும் எமது போராட்டத்தை முன்னெடுத்தல்.

4. 5 சிங்கள அரசிற்குத் துணை போகும் தமிழ் தரகு முதலாளிகள் எமது இரண்டாம் பட்ச எதிரிகள்.

4. 6 தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் மூளை உழைப்பாளிகள், தேசிய முதலாளிகள் உட்பட சகல ஜனநாயக சக்திகளும், இத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் புரட்சிகர சக்திகளே. பரந்துபட்ட ஜனநாயக சக்திகளை உள்ளடக்கிய தொழிலாளர் விவசாயிகளைத் தலைமையாகக் கொண்ட முன்னணியே எமது போராட்டத்தின் முன்னணிப் படையாகும்.

4. 7 பரந்துபட்ட தேசிய ரீதியான வெகுஜன ஸ்தாபனங்கள் போராட்டத்திற்குத் தயார்படுத்தும் மக்கள் தொடர்பு ஸ்தாபனங்களாகும்.

# 5. இயக்கம்

5. 1 தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காகப் போராடும் விடுதலை இயக்கமாகும்.

5. 2 இது தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (N. L. F. T) எனப் பெயர் கொண்டதாக அமையும்.

5. 3 தமிழீழ தேசிய விடுதலையை நோக்கமாகக் கொண்ட, எமது அரசியற் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ள எவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு வரலாற்று ரீதியாக நிலைபெற்றுவிட்ட மக்கள் சமூகம்—கொண்டுள்ளனர். தேசிய இனம் என்ற வகையில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு.

3. 2 சிங்கள தொழிலாளி வர்க்கமும், பரந்துபட்ட மக்களும், இனவாதச் சகதியுள் மூழ்கியுள்ளதால் தமிழ் மக்கள் இவ்வமைப்பில் பூரண உரிமைகளுடன் வாழமுடியாதுள்ளது. எனவே தமிழ் தேசிய இனம் சுயநிர்ணய உரிமையான, தமக்கான இறைமையுள்ள அரசை உருவாக்குவதே இன்றைய நிலையில் சாத்தியமான தீர்வாகும்.

3. 3 மலையக மக்களின் தலைவிதியை அவர்களே தீர்மானிக்கும் உரிமையுடையவர்கள். பாதுகாப்பையும், வாழ்வையும் உத்தரவாதம் செய்ய அவர்கள் வாழும் பிரதேசத்தில் போராட முன்முயற்சி எடுத்தல்.

3. 4 முஸ்லீம் மக்களை தமது தனித்துவத்தைப் பேணக்கூடிய வகையில், தமிழ் மக்களின் போராட்டத்துடன் இணைந்து செல்லக் கூடியதாக அணிதிரட்டல்.

## 4. எமது போராட்ட வழிமுறை

4. 1 தமிழ் பேசும் மக்களுக்கும் அரசிற்கும் இடையிலான முரண்பாட்டை—எதிரி முரண்பாட்டை—ஆயுதம் ஏந்திய போராட்டம் மூலமே தீர்க்கப்பட முடியும்.

4. 2 எமது போராட்டம், தமிழ் பிரதேசத்தை சிங்கள அரசிடமிருந்து மீட்டெடுக்கின்ற தேசிய விடுதலைப் போராட்டம் என்ற வகையில் மக்கள் போராட்டமாகவே அமையும். மக்களை ஸ்தாபனமயப்படுத்தி ஆயுதமேந்திய போராட்டமாகிய மக்கள் யுத்தமே எமது யுத்த தந்திரமாகும்.

4. 3 தமிழ் மக்களிடையே பொருளாதார அரசியல் அம்சங்களில் சமச்சீரற்ற வளர்ச்சி உண்டு. இதன் காரணமாக போராட்ட சக்திகளது வளர்ச்சியும் சமச்சீரற்றதாகவே இருக்கும். எமது போராட்டம் மக்கள் சக்தியில் தங்கி நின்று அணிதிரட்டி, சிறுகச் சிறுக போராட்ட சக்திகளை கட்டியெழுப்பும் வகையிலான மக்கள் யுத்தமாக அமையும். இது தற்காப்புக் கட்டம், தாக்குதற் கட்டம், இறுதியாக முழு வெற்றிக்கான தேசம் பரந்த உள்நாட்டு யுத்தம் என்ற கட்டத்திற்கு வளர்ந்து செல்லும்.



மலையக மக்களினை அணிதிரட்டி அவர்களின் உரிமைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் ஆயுதமேந்திய போராட்டத்தை முன்னெடுக்க வழிநடத்தல். இப் போராட்டங்கள் ஒன்றுக்கொன்று உதவும் வகையில் அமையும் வண்ணம் முன்னெடுத்தல்.

4. 4 எமதுநேரடி எதிரி, சிங்கள இனவெறி அரசும் ஆயுதப்படையுமே. இவற்றை எமது மண்ணில் இருந்து விரட்டியடிப்பதன் மூலமே, எமக்கான இறைமை உள்ள அரசை உருவாக்கவும், ஒடுக்குமுறைக்குள்ளாகி வரும் சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தைத் தொடுக்கும் வகையில் சிங்கள புரட்சிகர சக்திகளுக்கு உதவியளிக்கவும் முடியும். சர்வதேச ரீதியாக புரட்சிகர சக்திகளினதும் முற்போக்கு சக்திகளதும் போராட்டத்திற்கும் முன்னேற்றத்திற்கும், இசைவாகவும், பரஸ்பரம் உதவும் வகையிலும் இவர்களது ஆதரவைப் பெறும் வகையிலும் எமது போராட்டத்தை முன்னெடுத்தல்.

4. 5 சிங்கள அரசிற்குத் துணை போகும் தமிழ் தரகு முதலாளிகள் எமது இரண்டாம் பட்ச எதிரிகள்.

4. 6 தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் மூளை உழைப்பாளிகள், தேசிய முதலாளிகள் உட்பட சகல ஜனநாயக சக்திகளும், இத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் புரட்சிகர சக்திகளே. பரந்துபட்ட ஜனநாயக சக்திகளை உள்ளடக்கிய தொழிலாளர் விவசாயிகளைத் தலைமையாகக் கொண்ட முன்னணியே எமது போராட்டத்தின் முன்னணிப் படையாகும்.

4. 7 பரந்துபட்ட தேசிய ரீதியான வெகுஜன ஸ்தாபனங்கள் போராட்டத்திற்குத் தயார்படுத்தும் மக்கள் தொடர்பு ஸ்தாபனங்களாகும்.

## 5. இயக்கம்

5. 1 தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காகப் போராடும் விடுதலை இயக்கமாகும்.

5. 2 இது தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (N. L. F. T) எனப் பெயர் கொண்டதாக அமையும்.

5. 3 தமிழீழ தேசிய விடுதலையை நோக்கமாகக் கொண்ட, எமது அரசியற் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ள எவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5. 4 முன்னணியானது தனக்கான இராணுவ அமைப்பு, வெகு ஜன அமைப்பு என்பவற்றைக் கொண்டிருப்பதுடன், அவற்றை வழிநடத்துவதுமான மக்கள் இயக்கமாகும்.

5. 5 இயக்கத்தின் தலைமையானது ஜனநாயக மத்தியத்துவ அடிப் படையில் தெரிவு செய்யப்படும். இத் தலைமையானது இரா ணுவ அமைப்புக்கும் வழிகாட்டியாக இருக்கும்.

## 6. எமது நோக்கமும் அரசியற் கொள்கையும்

6. 1 சுதந்திரமும் சுயாதிபத்தியமும் கொண்ட மக்கள் ஜனநாயக சமூக அமைப்பின் அடிப்படையிலான தமிழீழ மக்கள் குடிய ரசை அமைத்தல்.

6. 2 சகலவிதமான ஒடுக்குமுறைக்கும் மற்றும் ஊழல்களுக்கும் காரணமான இன்றைய நிர்வாக முறையை ஒழித்து தமிழ் மக்களின் சகல தேசியப் பிரிவினர்களதும் பிரதிநிதிகளைக் கொண்ட மக்கள் தேசிய மன்றம் ஒன்றின் நிர்வாக முறையை அமுலுக்குக் கொண்டுவரல்.

6. 3 சகல தேசபக்த பாசிச விரோத தேசிய பிரிவினரதும் பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், திருப்பி அழைக்கவும் கூடிய உரிமையையே அடிப்படையாகக் கொண்ட மக்கள் மன்றமாக இத் தேசிய மன்றம் அமையும்.

6. 4 தேர்தல் முறையை, சகல சமூக பிரிவினரதும் பிரதிநிதித் துவம் அமையும் வகையில் அமைத்து சகல ஆட்சி அதிகா ரங்களையும் ஜனநாயக மத்தியத்துவ கோட்பாட்டிற்கேற்ப நடைமுறைப்படுத்தல்.

6. 5 சகல இன மக்களையும் அவர்கள் தனித்தன்மையை பேணு வதற்கான சகல உரிமைகளையும் வழங்குவதும், மத சார் பற்று இருக்கவும், மதங்களை அனுஷ்டிக்கவும், விமர்சிக்கவும் சகலருக்கும் சமத்துவமான உரிமைகளை உருவாக்குதல்.

6. 6 முஸ்லீம் மக்கள் மீது எதுவித திணிப்பிற்கோ, மேலாதிக்கத் துக்கோ இடமளிக்காத வகையில் அவர்களது ஜனநாயக உரி மைகளுக்கும், சமத்துவத்திற்கும் உத்தரவாதமளித்தல். அவர் களின் விருப்பத்திற்கேற்ற தனித்துவம் பேணக்கூடிய வகை யில் இவர்கள் செறிவாக வாழும் கல்முனைப் பகுதிகளில், அதிகாரமுள்ள தனியான நிர்வாக அமைப்பு உருவாக்கப் படும். வடகிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லீம் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட் டத்திற்கு ஆதரவு வழங்குதல்.



6. 7 மலையக மக்கள் நடாத்தும் நியாயபூர்வமான போராட்டங்க ளுக்கு உதவி செய்து, அவர்கள் தேசிய தன்னாட்சியைப் பெறு வதற்கு ஆதரவளித்து ஊக்குவித்தல்.

6. 8 சாதித் தீண்டாமை போன்ற சகல சமூக குறைபாடுகளையும் இல்லாதொழித்து கலாச்சார மறுமலர்ச்சிக்காக முயற்சித்தல்.

6. 9 பெண்ணடிமைத் தனத்தை இல்லாதொழித்து, பெண்க ளுக்கு சகல துறைகளிலும், நடவடிக்கைகளிலும் சமஉரிமை வழங்குதல்.

6.10 தமிழ் மொழியை சகல நிர்வாகத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தல்.

6.11 சமூக தேசிய, ஜனநாயக விரோதிகளை நிர்வாகத்துறைகளுக்கு தேர்ந்தெடுக்கும் உரிமைகளை மறுத்து அவர்களை அடக் கும் சட்டங்களை அமுல்படுத்தல்.

6.12 தேசிய அரசின் இராணுவத்திலும், காவல்துறையிலும், ஜன நாயக முறையை உருவாக்குதல். தேசிய சபைகளில் அவர் களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்குதல். இராணுவ அமைப்பை பாதுகாப்பிற்கு மட்டுமன்றி தேசிய உற்பத்தி வேலைகளிலும் பங்கேற்கச் செய்தல். இவர்களுக்கும் மக்களுக்கும் நல்லுற வைப் பேணல்.

6.13 அரச ஊழியர்கள், இராணுவத்தினரிடையே அதிகார வர்க்க உணர்வை ஏற்படாது தடுத்தல்.

6.14 மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகளைக் கொண்ட நீதி மன்றங்களை உருவாக்குதல். தேசிய நலன் பேணும் சட்டங்க ளுக்குட்பட்டு அவற்றை நிர்வகித்தல். கிராமங்களில் மக்கள் நீதிமன்றங்களை நிறுவுதல்.

6.15 மக்கள் விரோத சக்திகளையும், விடுதலைப் போராட்ட கால எதிரிகளையும் மக்கள் நீதிமன்றங்களின் முன் நிறுத்தி விசா ரணைக்குட்படுத்தல்.

6.16 சகல ஜனநாயக அமைப்புக்கள், கட்சிகள் போன்றவை இயங்க அனுமதிப்பது, சகலருக்கும் அவற்றில் ஈடுபட பூரண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமையளிப்பது. (பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டங்கள் கூடும் உரிமை)

6.17 தேசிய பாதுகாப்பிற்காக சகல மக்களையும் ஆயுதமேந்த அனுமதித்து, அவற்றில் உயிரிழப்போருக்கும் ஊனமடைந்தோருக்கும், அவர்களது குடும்பத்திற்கும் அரச பாதுகாப்பு வழங்கல்.

6.18 சிறைச்சாலைகளில் மனிதப் பண்பு குன்றாமல் பராமரிப்பது.

# 7. பொருளாதாரக் கொள்கை

7. 1 மக்கள் ஜனநாயக சமூக அமைப்பினை கட்டியெழுப்பும் நோக்கினை நிறைவேற்றக் கூடிய வகையில் எமது பொருளாதாரக் கொள்கைகள், வேலைத் திட்டங்கள் அமையும். நவகாலனிய பிடியிலிருந்தும் நிலப்பிரபுத்துவ எச்சசொச்சங்களிலிருந்தும் பூரணமாக விடுவித்தல்.

7. 2 வங்கிகள், போக்குவரத்து சேவைகள், பாரிய தொழில்கள் மற்றும் சேவைகள் யாவும் அரச உடமையாக இருக்கும்.

7.3 எமது பகுதிக்குள் இருக்கும் இலங்கை அரசின் வங்கிகள், தொழில் நிறுவனங்கள், ஆலைகளை நஷ்டஈடு இன்றி அரச உடமையாக்கப்படும்.

7. 4 நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு, நிலம் மறு பங்கீடு செய்வதன் மூலம் விவசாயிகளின் நிலப்பிரச்சினை தீர வழி செய்யப்படும். உழுபவனுக்கே நிலம்; நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் என்ற கோட்பாட்டை பின்பற்றுதல்.

7. 5 எமது தேசிய பொருளாதாரத்தை பலமாகக் கட்டும் நோக்குடன் தனியார் சிறு உற்பத்திகளுக்கு பாதுகாப்பளித்து மேலும் வளர ஊக்குவித்தல்.

7. 6 விவசாயம், மீன்பிடி என்பவற்றில் பிரதானமாகத் தங்கி அவற்றை நவீனமயப்படுத்தும் வகையில் சிறு உற்பத்திகளை வளர்த்தல்.

7. 7 எமது சுதேச வளங்களைப் பயன்படுத்தி அரச முதலீட்டில் உற்பத்தியைப் பெருக்கல்.



7. 8 சிங்களப் பகுதியில் தொழில் நிறுவனங்கள் வைத்துள்ள தமிழர்கள் தமிழீழப் பகுதியில் தமது உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு, பாதுகாப்பளித்து, ஊக்குவிக்கப்படும்.

7. 9 வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் எதுவித அச்சமுமின்றி தமது மூலதனத்தை சுயமாக முதலிட பாதுகாப்பும் ஊக்கமும் வழங்கப்படும்.

9.10 தனியார் மூலதனங்கள், தொழிலாளரின் நல்வாழ்வையும் வாழ்க்கைத் தரத்தையும் உத்தரவாதம் செய்வது என்ற நிபந்தனையின் பேரிலேயே அனுமதிக்கப்படும். இந் நோக்கில் தனியார் நிறுவனங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் இதர படிகளை அரசே தீர்மானிக்கும்.

7.11 கிராமிய கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்கள் வாழ்நிலை உயர்வுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும்.

7.12 தமிழீழப் பகுதிகளில் குடியேற விரும்பும் ஐதான பகுதிகளில் வாழும் மலையக மக்களுக்கு குடியேற்ற வசதிகளும் வாழ்க்கை வசதிகளும் செய்து முழு உரிமைகளுடன் வாழ வழிசெய்யப்படும்.

7.13 வரிகளைக் குறைவாகவும் நியாயமான முறையிலும் அறவிடப்படும்.

7.14 திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அகற்றி பாரம்பரிய பிரதேசங்களை மீட்டெடுத்தல். தமிழீழப் பகுதிகளில் வாழும் சிங்கள மக்களுக்கு ஜனநாயக உரிமைகளுடனும் பாதுகாப்புடனும் வாழ வழிசெய்யப்படும்.

# 8. கல்வி கலாச்சாரத் துறைக் கொள்கைகள்

8. 1 விஞ்ஞான பூர்வமான கல்வியை வழங்கல்.

8. 2 மக்களுக்கும் தேசத்துக்கும் பயனூட்டுகின்ற கல்விமுறையை உருவாக்கலும் பிற்போக்குக் கல்வியை ஒழித்தலும்.

8. 3 உற்பத்திக்குதவும் வகையில் கல்வி முறையை மாற்றல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

8. 4 மக்கள் ஜனநாயகக் கல்விமுறையை உருவாக்கல். சுய பாஷைக் கல்வி முறையைக் கைக்கொள்ளல்.

8. 5 விஞ்ஞானம் மற்றும் உயர் தொழில் நுட்பக் கல்வியைக் கற்பதற்காவும், தொடர்பிற்காவும் ஆங்கில மொழியைத் தொடர்ந்து போதிப்பதும், மேற்படி விடயங்களை தாய்மொழியிலேயே கற்க வசதி செய்தலும்.

8. 6 சகலருக்கும் கட்டாய ஆரம்பக் கல்வியும், இலவசக் கல்வியும் வழங்கப்படும்.

8. 7 பழமை பேணும் - பிற்போக்கு பிரபுத்துவ - அடிமைப் பண்பாடுகளை ஒழித்துக்கட்டி அனைத்து மக்களுக்கும் விடுதலையையும் உரிமையையும் வழங்கும் வகையிலான முற்போக்கான மக்கள் ஜனநாயகப் பண்பாட்டை கட்டியெழுப்புதல்.

8. 8 சீதனம் போன்ற வடிவங்களிலான பெண்ணடிமையை இல்லாதொழித்தல்.

8. 9 தேசிய ரீதியில் கலை, இலக்கியம், கலாச்சாரம் போன்றவை வளர ஊக்குவித்தல்.

8.10 விஞ்ஞானம், தொழில் நுட்பம் போன்றவற்றை வளர்ப்பதற்கு ஆய்வு நிறுவனங்களை ஏற்படுத்துதல்.

8.11 கலை இலக்கிய கலாச்சார வளர்ச்சிக்காக பொது நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

8.12 மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் கலை, இலக்கியங்கள், சினிமாக்கள், பத்திரிகைகள், அந்நியக் கலாச்சாரங்கள் என்பவற்றையும், இவற்றை ஊக்குவிக்கும் நிறுவனங்களையும் தடை செய்தல்.

# 9. சுகாதாரக் கொள்கைகள்

9. 1 மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

9. 2 சுகாதார நிறுவனங்கள் மக்கள் மத்தியில் சென்று, அவர்களின் நலன் பேண ஒழுங்கு செய்யப்படும்.



9. 3 மக்களின் போஷாக்கு விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்படும்.

9. 4 குழந்தைகளின் உணவு, சுகாதார விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்படும்.

9. 5 பொது மக்களின் உடை, உறைவிட வசதிகளுக்கு அரசு உதவியளிக்கும்.

# 10. அயல்நாட்டுக் கொள்கைகள்

10.1 எந்த ஒரு ஏகாதிபத்திய அரசுகளினதும், அரசியல் தலையீட்டையோ, பொருளாதார மேலாதிக்கத்தையோ அனுமதிக்காது இருத்தல்—இல்லாதொழித்தல். எந்த ஒரு நாடும் எமது உள்விவகாரங்களில் தலையிட அனுமதிக்காமை.

10.2 பெரு வல்லரசுகளுக் கெதிராக உலக மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு ஆதரவளித்தலும் பங்குபற்றலும்.

10.3 மூன்றும் உலக நாடுகளுடனும், வளர்ச்சியடைந்த நாடுகளுடனும் பின்வரும் நிபந்தனைகளில் உறவுகளைக் கொண்டிருத்தல்.

*i)* நாடுகளின் சுயாட்சி உரிமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் மதித்தல்.

*ii)* ஆக்கிரமிப்பை எதிர்த்தல்.

*iii)* நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாது இருத்தல்.

*iv)* சமத்துவ அடிப்படையில் பரஸ்பர நலன்களை அமைத்தல்.

*v)* சமாதான சகவாழ்வைக் கடைப்பிடித்தல்.

10.4 உலகெங்கும் தேசிய விடுதலைக்காக, ஒடுக்குமுறைக் கெதிராகப் போராடுகின்ற மக்களுக்கு நேசநாடாக விளங்குதல்.

10.5 மூன்றும் உலக நாடுகள் தமது இறைமைக்காக சகல மட்டங்களிலும் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

10.6 சிங்கள மக்களின் நியாயமான போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல்.

10.7 சிங்கள புரட்சிகர சக்திகளுடன் ஒருவர் போராட்டத்திற்கு மற்றவர் உதவும் வகையில் பரஸ்பர ஒத்துழைப்பையும், உதவிகளையும் வழங்கல்; போராடும் சிங்கள முற்போக்கு சக்திகளுக்கு பின்னணிப் பிரதேசமாக விளங்குதல்.

10.8 உலகிலுள்ள அனைத்துப் போராடும் முற்போக்கு சக்திகளுக்கும் பின்னணிப் பிரதேசமாக அமைந்து, ஆதரவும் உதவியும் வழங்கல்.

10.9 தமிழ் தேசிய வெறியை உருவாகாமல், பார்த்தலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருத்தலும்.

## பிற்குறிப்பு:

5.3 இல் வசனமொன்று விடுபட்டுப் போய் பிழை நேர்ந்துள்ளது. பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்.

5.3 தமிழீழத் தேசிய விடுதலையை நோக்கமாகக் கொண்ட, எமது அரசியற் திட்டத்தையும், அமைப்பு விதிகளையும் ஏற்றுக் கொண்டுள்ள எவரும் அங்கத்தவராகச் சேரலாம்.

எமது விடுதலைப் பாதை கடினமானதும், கஷ்டங்கள் நிறைந்ததும் தான். இருப்பினும் எமது இலட்சியங்கள் மகத்தானவை. கஷ்டங்களை துச்சமாக மதித்து, தடைகளைத் தகர்த்தெறிந்து, எமது வாழ்வுக்கான விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

www.tamilarangam.net

□

வெற்றுக் கோஷங்கள்
வீணை முழங்கட்டும்

வெறுங்கை வீரர்கள்
வேதாந்தம் பேசட்டும்

தட்டி எழுப்பி நம் சக்தி
தலை நிமிர வைப்பதற்கு

கட்டி எழுப்புவோம்
கடல் போன்ற மாளிகைத்தை!

நல்விர்சையான நடைமுறையை
நிராகரிப்போம்!

ஸ்தாபன ரீதியான வேலைமுறையை
முன்னெடுப்போம்!

சுய பாதுகாப்பை நோக்கி
முன்னேறுவோம்!

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை
முன்னெடுப்போம்!

தமிழீழ மக்கள் குடியரசை
அமைப்போம்!

□□